**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 192/2020**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.09.2025 | தகப்பனார் பெயர்: | அப்துல் சலாம் |
| பெயர்: | சலாவுதீன்<br>(PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | புத்தூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 03.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.59)**

1. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 637/1 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்பது 1 ஏக்கர் 66 செண்ட். தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியும், வாய்க்காலுக்கு கிழக்கு, கண்ணிக்கு மேற்கு, ஹாசிம் நஞ்சைக்கு தெற்கு, பக்கீர் முகமது திடலுக்கு வடக்கு இதற்குட்பட்டது. தாவா சொத்தில் தென்னை மரங்கள் சுமார் 7 அல்லது 8 இருக்கும், மாமரங்கள் சுமார் 85 இருந்தது, தற்போது 7 அல்லது 8 தான் உள்ளது. தேக்கு மரங்கள் சுமார் 30 இருக்கும். பிரதிவாதிகள் இருவரும் எனது உடன்பிறந்த சகோதரிகள். எனது தகப்பனார் தாவா சொத்தை 10.11.1974ல் காந்தன் வகையறாவிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான்.

2. அதன்பிறகு எனது தகப்பனார் தாவா சொத்தை கடந்த 01.08.1984ல் எனது தாயார் ஜன்னத்துன்னிசா பீவிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தாவா சொத்திற்கு எனது தாயார் உரிமையாளர்

ஆவார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட்டிற்கு பிறகு தாவா சொத்தை எனது தாயார் அவரது சொந்தமான சொத்தை போல அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள மகசூலையும் உரிமையாளர் என்ற முறையில் எனது தாயார் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

3. எனக்கு எனது தாயார் மற்றும் பிரதிவாதிகளிடம் சுமூகமாக உறவு இருக்கிறதா என்றால் இல்லை, தாயார் இருந்தவரை அவரிடம் சுமூக உறவு இருந்தது, ஆனால் பிரதிவாதிகளிடம் இல்லை. எனது தாயார் வாய்மொழியாக மே மாதம் 2004ம் வருடத்தில் ஹிபா கொடுத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. அதே போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தாயார் பிரதிவாதிகளுக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் மூலம் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் வழக்கு தொடர்ந்த பிறகு தான் எனக்கு தெரியும், அதற்கு முன்பு எனக்கு தெரியாது.

4. தாவா சொத்து மேற்கண்ட செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டதில் இருந்து பிரதிவாதிகளின் வசத்திலும் அனுபவத்திலும் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது மாமனார் பெயர் சம்சுதீன், மாமியார் பெயர் ரகமத்துநிஷா. தாவா சொத்தை எனது மாமனார் என்னுடைய தூண்டுதலின் பேரில் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ. எண் 35/2011 என்று ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி என் மீதும், எனது தாயார் மற்றும் இந்த பிரதிவாதிகளின் பேரில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் தூண்டுதல் செய்யவில்லை.

5. அந்த வழக்கில் நான் ஆஜராகவில்லை, அந்த வழக்கு கடந்த 10.12.2013ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பின் பேரில் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் A.S. 02/2014 என்ற எண்ணில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் அதன் விபரம் எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீட்டில் எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. அந்த மேல்முறையீடும் முழுமையான விசாரணைக்குப் பிறகு

கடந்த 13.10.2019ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பில் எனது தாயார் ஹிபா ஏதும் கொடுக்கவில்லை என முடிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. அந்த மேல்முறையீட்டின் சாராம்சம் இந்த வழக்கில் உள்ளதால் இந்த பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு முன் தீர்ப்பு தடையில் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் தாவா சொத்தை பொறுத்து சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் மீதும், என் தாயார் மீதும் மற்றும் இந்த வழக்கின் பிரதிவாதிகளின் மீதும் அ.வ. எண். 24/2011 என்ற வழக்கு தடை உத்தரவு கேட்டு தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு எனது மாமனாரால் மேல்நடத்த விரும்பவில்லை என்று கடந்த 05.04.2013ல் திரும்பப் பெறப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 14.24)**